DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 254 /2022 |
| Deposition of witness | : | PW-8 |
| Name | : | சிவனேசன் |
| Father's /Husband Name | : | கலியமூர்த்தி |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 60 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21st day May 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பேரளம் காவல் நிலையத்தில் நான் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, கடந்த 14.07.2021 மாலை 05.30 மணிக்கு அன்று தலைமைக்காவலர் அருளாணந்தம் பேரளம் காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது நான் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தேன். அப்போது லெட்சுமணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை தலைமைக்காவலர் அருளாணந்தம் பெற்று பேரளம் காவல் நிலைய குற்ற எண். 819/2021, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(1) இதச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவர் இவ்வழக்கினை பதிவு செய்து எனது விசாரணைக்கு வைக்கப்பட்டதை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.07.2021ம் தேதி மாலை 06.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரமேஷ், சொக்குப்பிள்ளை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்துள்ளார். அவை முறையே **அ.சா.ஆ. 4** மற்றும் **அ.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு சாட்சிகள் 1 முதல் 5 வரை ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியே

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரியான கந்தன் என்பவரை 14.07.2021 ம் தேதி இரவு 07.15 மணிக்கு போழக்குடி பேருந்து நிறுத்தம் அருகே இருந்தவரை அடையாளம் கண்டு இவ்வழக்கின் காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு அ.சா. 1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அபிராமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வந்தேன். அந்து சான்று ஏற்கனவே அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு வழக்கினை பதிவு செய்த தலைமைக்காவலர் அருளாணந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**-

தலைமைக்காவலர் தான் புகாரை பெற்றார் என்றால் சரிதான். எதிரி தாக்க பயன்படுத்திய கம்பை கைப்பற்றினேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தலைமைக்காவருக்கு அதரவாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by
M S
BHARATHIDHASAN
Date: 2025.05.21
03:53:24 +0530